## சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல நிதியம் - 2014

சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சருவதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 நிறுவனத்தை தாபித்தல்

2014 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய(கூட்டிணைத்தல்) சட்டம் 2014 ஏப்றல் மாதம் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீளாய்வாண்டு பூராகவும் சாசனாரக்சக மண்டலயவின் கீழ் காணப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சாசனாரக்சக மண்டலய நிதியச் சட்டத்தின் 5ஆம் பந்தியின்படி காப்பாளர்கள் மற்றும் மதியுரையாளர்கள் அடங்கிய நிறைவேற்றுக் குழுவொன்று மூன்றாண்டு காலத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அத்துடன், 24 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 24 பௌத்த மதகுருமார்கள் நிதியத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

### 1.5 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமான செலவினக் கணக்கு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் அத்துடன் மூலாதாரங்களுக்கு ஏற்புடைய ஏதேனும் செம்மையாக்கல் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையின் பிரகாரம் காசும் காசுக்குச் சமமானவைகள் ரூபா 9,349,248 ஆனபோதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் காசு மீதி ரூபா 1,158,685 ஆக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் வங்கி கூற்றின் பிரகாரம் நடைமுறைக் கணக்கு மீதி ரூபா 514,101 ஆனபோதிலும் இறுதிக் கணக்கின் பிரகாரம் குறித்த மீதி ரூபா 203,785 ஆகும். எனினும், நடைமுறைக் கணக்கு பொருட்டான காசுப் புத்தகமொன்று நிதியத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வங்கி இணக்கக் கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2014 தம்ம பாடசாலை கொடி விற்பனை அறிக்கை பிரகாரம் ரூபா 20,470,415 பெறுமதியான 1,897,579 கொடிகள் 20 மாவட்டங்களிலுள்ள 289 பிராந்திய சாசனாரக்சக மண்டலய மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தபோதிலும், அச்சிடப்பட்ட கொடிகளின் எண்ணிக்கை, விற்கப்படாது எஞ்சிய கொடிகளின் எண்ணிக்கை மற்றும் குறித்த எஞ்சிய கொடி எண்ணிக்கை காணப்படும் இடம் அல்லது உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் மொத்த வருமானத்தில் 80 சதவீத அளவிலான ரூபா 6,095,980 கொடி விற்பனை வருமானத்தை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்தவோ அல்லது மெய்மையாய்வுசெய்யவோ முடியாதிருந்தமையினால் வருமானத்தின் சரியானத்தன்மை மற்றும் பூரணத்துவம் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இனங்காமைகள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2005 திசெம்பர் 19ஆம் திகதிய பீஈடி 33 இலக்க அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை | எல்லா அரச நிறுவனங்களின் முதலீடு அரச வங்கிகளில் மாத்திரம் மேற்கொள்ள வேண்டியபோதிலும், நிறுவனம் நீண்ட காலத்திலிருந்து ரூபா 5,495,000 ஐ தனியார் வங்கியொன்றில் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்திருந்தது. |
| (ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி 257 | 12 சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா 770,000 ஆன தொகை உரிய கொடுப்பனவு வவுச்சர் சான்றுப்படுத்தப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தினது வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 7,658,514 மற்றும் ரூபா 6,499,829 விளைந்திருந்தமையினால் அதன் நடவடிக்கைகளின் மிகையாக ரூபா 1,158,685 விளைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய நிதியத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருமாறு.

- புத்தசாசனத்தின் நலனை மேம்படுத்தும் முகமாகவும் பிக்கு சமூகத்தின் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முகமாகவும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல்.

- பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள பௌத்த ஆலயங்களின் அபிவிருத்தியையும் புனரமைப்பையும் ஊக்குவித்தல், பௌத்த குருமார்களுக்கும் பௌத்த பொது நிலையினருக்கும் இடையில் சுமுகமான உறவை உறுதிப்படுத்துவதில் இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல்.

- ‘‘தம்ம பாடசாலைக் கல்வி’’ யினை அபிவிருத்தி செய்யும் முகமாகவும் தம்ம பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலன்புரிக்காக செயற்படுவதற்காகவும் இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல்.

- வெளிச் செல்வாக்குகளிலிருந்து பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாத்தலும் அவ்வுரிமைகளை விருத்திசெய்தலும், பௌத்த மதப் பற்றாளர்களிடையே பௌத்த மத மரபுகளைப் பரப்புதலும் அவற்றைப் பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாகவும் இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல்.

- கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் செயற்படும் கூட்டுத்தாபன கிளைகளுக்கு வழிகாட்டுநெறிகளை வழங்கி அவற்றை மேற்பார்வை செய்தலும் அவற்றை ஒருங்கிணைத்தலும்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டில் சிசு சவிய புலமைப்பரிசில் பொருட்டு ரூபா 1,136,500 உம், மருத்துவ உதவி பொருட்டு ஒருவருக்கு ரூபா 1000 வீதம் ரூபா 319,000 உம், பிரதேசச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தொகை கிடைக்கவேண்டியவர்களுக்கு கிடைக்கப்பெற்றதா என்பதுபற்றி சாசனாரக்சக மண்டலயவினால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

2006 திசெம்பர் 22ஆம் திகதிய பீஎப்/423 இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் 4.3ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களினுள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியபோதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 மே மாதம் 15ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல் திட்டம்

---

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கு ஏற்றவிதத்தில் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

---

நிதி ஒழுங்குவிதி 133(ஆ) மற்றும் 2009 யூன் 09ஆம் திகதிய DMA/2009(1) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கையின் 03ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் மீளாய்வாண்டினுள் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்ப்பாடுகளும்

---

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பற்றி காலத்துக்குக் காலம் நிதியத்தின் செயலாளர் விழிப்பூட்டப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) நிதியத்தினால் அச்சிடப்பட்டு விற்கப்பட்ட கொடிகளின் வருமானம் மற்றும் செலவுகளை தெளிவாக இனங்காணும் விதத்தில் கணக்குகளை பதியாமை. |
| | (ii)பேரேடு கணக்குகள் தெளிவாகவும் சரியாகவும் முறைய- |
| | (iii) நடைமுறைக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பொருட்டு காசுப் புத்தகமொன்றை பயன்படுத்தாமை மற்றும் முறையாக வவுச்சர் தயாரிக்கப் படாமை. |
| | (iv) வருமானம் பொருட்டு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாமை. |
| (ஆ) கொடி அச்சிடலும் விற்பனையும் | அச்சிடப்பட்ட கொடிகள் பொருட்டு தொடர் இலக்கம் இடாமை அத்துடன் விற்கப்படாத எஞ்சிய கொடிகளை மீளப் பெறுதல் மற்றும் அறிக்கை பேணுதல் இடம்பெறாமை. |